DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 172 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **அய்யாத்துரை (உதவி இயக்குநர் கனிமவளம்)**(P.w. 15) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of June 2026

(எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :–**

1. நான் புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் உதவி இயக்குநராக பணியாற்றி தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 27.01.2017ம் தேதியன்று விருதுநகர் மாவட்டம் புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் உதவி இயக்குநராக பணியில் இருந்தபோது காவல் ஆய்வாளர் திருச்சுழி வட்டம் அவர்கள் திருச்சுழி கிராம புல எண்.400/1ஏ, 1 பி, 3ஏ1, 3ஏ2, மற்றும் 3 பி ஆகிய புலங்களில் மணல் வெட்டி எடுத்துள்ளதாகவும், அதனை கண்டறியும் பொருட்டு அந்த சொத்துக்களில் எவ்வளவு அளவு மணல் எடுக்கப்பட்டது என்று ஆய்வு செய்து அறிக்கை வழங்குமாறு கேட்டிருந்தார்.

2. மேற்கண்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டதின்படி கடந்த 02.02.2017ம் தேதியன்று ஆய்வு மேற்கொள்ள நான் மற்றும் பிர்கா சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர், திருச்சுழி காவல் ஆய்வாளர் ஆகியோர்கள் மேற்கண்ட புல எண்களுக்குரிய இடத்திற்கு சென்று பார்வையிட்டத்தில் அதனுடைய எல்லைகள் சரியாக குறிப்பிடப்படாததால் மேற்கண்ட புலங்களை அளந்து எல்கை கல் நட்டு தருமாறு திருச்சுழி காவல் ஆய்வாளர் மூலம் வருவாய் வட்டாட்சியர் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். கடந்த 08.02.2017ம் தேதியன்று மேற்படி சொத்துக்களை அளந்து கல் நட்டதாக தகவல் கிடைத்ததின்பேரில் 10.02.2017ம் தேதியன்று சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர், பிர்கா சர்வேயர், திருச்சுழி காவல் ஆய்வாளர் ஆகியோர்களுடன் மேற்கண்ட புல எண்களுக்கு காலை 10.00மணியளவில் சென்று ஆய்வு செய்து எனது அறிக்கையினை 08.03.2017ம் தேதியன்று கிராம நிர்வாக அலுவலரின் வாக்குமூலம், புல வரைபடம் ஆகியவற்றுடன் இணைத்து திருச்சுழி காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். (அந்த அறிக்கை அசாஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (திருச்சுழி கிராம நிர்வாக அலுவலரின் வாக்குமூலம் அசாஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மேற்கண்ட சர்வே எண்களுக்கான புல வரைபடம் அசாஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). எனது அறிக்கையில் மேற்படி புல எண்களில் பின்வரும் அளவுகளில் மணல் வெட்டி எடுக்கப்பட்டிருந்தது.

1) (i) புல எண்.400/2–ல் 35 மீ x 20 மீ x 2 மீ என மொத்தம் 1400 க.மீ

(ii) புல எண். 400/2–ல் மற்றொரு இடத்தில் 30 மீ x 20 மீ x 1.6 மீ என மொத்தம் 960 க.மீ.

(iii) புல எண்.400/3ஏ2–ல் 55 மீ x 30 மீ x 4.5 மீ என மொத்தம் 7425 க.மீ.

(iv) புல எண்.400/3பி–ல் 43 மீ x 15 மீ x 1.5 மீ என மொத்தம் 968 க.மீ.

(v) புல எண்.400/3பி–ல் மற்றொரு இடத்தில் 120 மீ x 10 மீ x 1.6 மீ என மொத்தம் 1920 க.மீ.

மேற்கண்ட புல எண்களில் எடுக்கப்பட்ட மணலின் அளவு மொத்தம் 12673 க.மீ ஆகும். மேற்படி கனிமத்திற்கு அரசுக்கு செலுத்தவேண்டிய உரிமைத் தொகை (சீனியேரஜ் தொகை) ரூ.3,76,635/– ஆகும். அந்த கனிமத்தின் சந்தை மதிப்பு ரூ.23,26,275/– ஆக மொத்தம் ரூ.27,02,910/– ஆகும்.

2) (i) புலஎண். 401ல் 60மீ x 30 மீ x6 மீ அளவில் மொத்தம் 10800 க.மீ. ஆகும்.

(ii)புல எண். 402–ல் 120மீ x 40 மீ x6 மீ அளவில் மொத்தம் 28800 க.மீ. ஆக மேற்கண்ட புல எண்களில் எடுக்கப்பட்ட மணலின் அளவு மொத்தம் 39600க.மீ ஆகும்.

மேற்படி கனிமத்திற்கு அரசுக்கு செலுத்தவேண்டிய உரிமைத் தொகை (சீனியேரஜ் தொகை) ரூ.11,76,910/– ஆகும். அந்த கனிமத்தின் சந்தை மதிப்பு ரூ.72,69,150/– ஆக மொத்தம் ரூ.84,46,060/– ஆகும்.

3) (i) புலஎண். 390–ல் 35மீ x 10 மீ x2 மீ அளவில் மொத்தம் 700 க.மீ.

(ii)புலஎண். 390–ல் மற்றொரு இடத்தில் 60மீ x 30 மீ x 4.5 மீ அளவில் மொத்தம் 8100 க.மீ.

(iii)புலஎண். 390–ல் மற்றொரு இடத்தில் 96மீ x 25 மீ x 1.5 மீ அளவில் மொத்தம் 3600 க.மீ.

(iv)புலஎண். 390–ல் மற்றொரு இடத்தில் 37மீ x 30 மீ x 1.5 மீ அளவில் மொத்தம் 1665 க.மீ.

(v) புலஎண். 390–ல் மற்றொரு இடத்தில் 30மீ x25 மீ x 1.5 மீ அளவில் மொத்தம் 1125 க.மீ. மேற்கண்ட புல எண் 390–ல் எடுக்கப்பட்ட மணலின் மொத்த அளவு 15190 க.மீ ஆகும்.

மேற்படி கனிமத்திற்கு அரசுக்கு செலுத்தவேண்டிய உரிமைத் தொகை (சீனியேரஜ் தொகை) ரூ.4,51,435/– ஆகும். அந்த கனிமத்தின் சந்தை மதிப்பு ரூ.27,88,275/– ஆக மொத்தம் ரூ.32,39,710/– ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் 05.04.2017ம் தேதியன்று என்னை விசாரணை செய்தார்கள்.

**எ.த.கு.வி–**

1. முதல் நாள் இடத்தை அளவீடு செய்ய வந்தபோது இடத்தை அளவீடு செய்து கல் ஊன்றுவதற்கு காவல் ஆய்வாளர் மூலம் வட்டாட்சியரிடம் தெரிவித்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அது தொடர்பாக எழுத்து மூலமாக கடிதம் எதுவும் அளித்தேனா என்றால் எழுத்து மூலமாக கடிதம் கொடுக்கவில்லை. 08.02.2017ம் தேதியன்று கல் ஊன்றப்பட்டதாக எழுத்து மூலமாக எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் இல்லை. அசாஆ6 அறிக்கையில் பொருள் என்ற பத்தியில் தெரிவிக்கப்பட்ட விசயம் தொடர்பாகதான் காவல் ஆய்வாளர் எனக்கு கடிதம் அனுப்பினார் என்றால் சரிதான்.

2. திருச்சுழி புல எண்.400 மற்றும் அதனுடைய உட்பிரிவுகளில் இருந்த இடங்களைதான் பார்வையிட கேட்டுள்ளதாக பொருளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அறிக்கையில் காலம் **(ஆ)** மற்றும் **(இ)**–யில் காவல் ஆய்வாளரால் கேட்கப்படாத சொத்துக்களுக்கும் அளவீடு செய்து மதிப்பீடு அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிக்கை தயார் செய்வதற்கு நான் அளவீடு செய்தபோது எடுத்த

குறிப்புகளை எதுவும் எனது அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அறிக்கை தயார் செய்யும்போது எந்த ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி மணல்களின் மதிப்பினை நிர்ணயித்தேன் என்று எந்த விதியும் எனது அறிக்கையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதி 1959 புத்தகத்தில் இருந்தது.

3. கனிமத்திற்கு சீனியரேஜ் தொகை மற்றும் சந்தை மதிப்பு ஆகியவற்றை நிர்ணயம் செய்து அரசில் இருந்து அரசாணை வரும் என்றால் சரிதான். அந்த அரசாணையை எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. அசாஆ7 எந்த தேதியில் அளவீடு செய்யப்பட்டதோ, அதே தேதியில் கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் பெற்றதாகவும், அதில் நானும் வட்ட சார் ஆய்வாளரும், குறுவட்ட நில அளவரும், தனி வருவாய் ஆய்வாளரும் கையொப்பமிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் காவல் ஆய்வாளர் கையொப்பமிடும் பகுதியில் காவல் ஆய்வாளர் கையொப்பமில்லை என்றால் சரிதான். நான் அளித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கன மீட்டர் அளவுகளும் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்தில் உள்ள கனமீட்டரில் உள்ள அளவுகளும் ஒரே மாதிரி உள்ளது என்றால் சரிதான்.

4. அசாஆ7 வாக்குமூலம் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அசாஆ7 ஆவணம் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்கண்ட புல எண் 400–ன் உட்பிரிவுகளில் நான் சொல்லியுள்ள தினத்திற்கு முன்னர் அளவீடு எதுவும் செய்துள்ளேனா என்றால் இல்லை. 10.02.2017ம் தேதி நாங்கள் அளவீடு செய்ய வந்தபோது அந்த இடத்தில் மண் அப்போது எடுக்கப்பட்டது போல் இருந்ததா என்றால் அதற்கு சில நாட்களுக்கு முன்பு

எடுக்கப்பட்டதாக தெரிந்தது. நான் சொன்ன மாதிரி , சொன்ன நேரத்தில் முறையாக அளவீடு செய்து மதிப்பு அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.